தேர்தல் ஆணையர்கள் நியமன வழக்கு: மாறுபட்ட தீர்ப்பு பரிசீலிக்கப்படும்

உச்சநீதிமன்றம்

புது தில்லி, அக்.7: தேர்தல் ஆணையர்கள் நியமன வழக்கில் அளிக்கப்பட்ட மாறுபட்ட தீர்ப்பு பரிசீலிக்கப்படும் என்று உச்சநீதிமன்றம் புதன்கிழமை தெரிவித்தது.

தலைமைத் தேர்தல் ஆணையர், பிற தேர்தல் ஆணையர்களைத் தேர்வு செய்யும் குழுவில் இருந்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்கி, அவருக்குப் பதிலாக பிரதமர் சார்பில் நியமிக்கப்படும் மத்திய அமைச்சர் இடம்பெறும் வகையில், 2023-ஆம் ஆண்டு தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் (நியமனம், பணி நிபந்தனைகள், பதவிக் காலம்) சட்டம் இயற்றப்பட்டது.

இந்தச் சட்டத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உச்சநீதிமன்றம் விசாரித்த நிலையில், இந்த வழக்கை அதிக நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்ற வேண்டும் என்று மத்திய அரசு கோரியது. இந்தக் கோரிக்கை மீது கடந்த செப்.23-ஆம் தேதி உச்சநீதிமன்ற நீதிபதிகள் தீபாங்கர் தத்தா, சதீஷ் சந்திர சர்மா ஆகியோர் அடங்கிய அமர்வு தீர்ப்பளித்தது.

அப்போது இந்த விவகாரத்தை அதிக நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாற்ற வேண்டிய அவசியம் இல்லை' என்று நீதிபதி தீபாங்கர் தத்தா தீர்ப்பளித்தார். அதே வேளையில், இந்த விவகாரத்தை அதிக நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்து முடிவு எடுக்க வேண்டும் என்று நீதிபதி சதீஷ் சந்திர சர்மா தீர்ப்பளித்தார்.

நீதிபதிகள் மாறுபட்ட தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து, வழக்கை விசாரிப்பதற்கு அரசியல் சாசன அமர்வு அமைக்கும் வகையில், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியின் கவனத்துக்கு இந்த வழக்கை கொண்டு செல்ல இரண்டு நீதிபதிகளும் உத்தரவிட்டனர்.

இந்நிலையில், நீதிபதிகள் அளித்த மாறுபட்ட தீர்ப்பை திரும்பப் பெற வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. காங்கிரஸ் பிரமுகர் ஜெயா தாக்குர் தாக்கல் செய்துள்ள அந்த மனுவில், 'மாறுபட்ட தீர்ப்பளித்த நீதிபதிகளில் ஒருவரான சதீஷ் சந்திர சர்மாவின் மகன், மத்திய பிரதேச உயர்நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையத்தின் வழக்குரைஞராக உள்ளார். இது அந்த உயர்நீதிமன்ற வலைதளம் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. நீதிபதியின் குடும்ப உறுப்பினர், வழக்கில் ஒரு தரப்புக்காக ஆஜரானால், அவ்வழக்கை அந்த நீதிபதி விசாரித்து தீர்ப்பளிக்கக் கூடாது.

மேலும், தனது மகன் வேறு நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையத்துக்காக ஆஜராகி வருவதை நடைமுறைப்படி, நீதிபதி சதீஷ் சந்திர சர்மா முன்கூட்டியே தெரியப்படுத்தி இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. எனவே, செப்.23-இல் அளிக்கப்பட்ட மாறுபட்ட தீர்ப்பை திரும்பப்பெற வேண்டும் என்று கோரப்பட்டது.

இந்த மனு குறித்து தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, வி.மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வின் கவனத்துக்கு மூத்த வழக்குரைஞர் கோபால் சங்கரநாராயணன் புதன்கிழமை கொண்டு வந்தார். இதையடுத்து அந்த மனுவை பரிசீலித்து முடிவுஎடுப்போம்என்றுதலைமை நீதிபதி சூர்ய காந்த் தெரிவித்தார்.

அரசின் தலைவராக 25 ஆண்டுகள் நிறைவு

அத்வானியிடம் ஆசிபெற்ற பிரதமர் மோடி

தில்லியில் பாஜக முதுபெரும் தலைவர் அத்வானியை புதன்கிழமை சந்தித்து ஆசி பெற்ற பிரதமர் மோடி.

புது தில்லி, அக். 7: அரசின் தலைவராக (குஜராத் முதல்வர்–பிரதமர்) 25 ஆண்டுகளை நிறைவு செய்ததையொட்டி, பாஜக முதுபெரும் தலைவர் எல்.கே.அத்வானியிடம் பிரதமர் மோடி புதன்கிழமை ஆசிபெற்றார்.

தில்லியில் உள்ள அத்வானியின் இல்லத்துக்கு சென்ற பிரதமர் மோடி, அவருடன் கலந்துரையாடினார். மேலும், அரசின் தலைவராக தாம் 25 ஆண்டுகளை நிறைவு செய்ததை முன்னிட்டு, அவரிடம் ஆசி பெற்றார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பதிவிட்ட பிரதமர், 'மூத்த தலைவர் அத்வானியை அவரது இல்லத்தில் சந்தித்து ஆசி பெற்றேன்.

அவரது பல்லாண்டுகால பொதுச் சேவையும், தேச வாழ்வுக்கான பங்களிப்பும் அழியாத முத்திரையைப் பதித்துள்ளன. நாட்டின் வளர்ச்சியை வலுப்படுத்துவதில் மிக முக்கிய பங்காற்றியவர் அவர்' என்று குறிப்பிட்டுள்ளார்.

நிதின் நபின் புகழாரம்: பிரதமர் மோடியின் 25 ஆண்டுகால பயணத்தையொட்டி, பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

பிரதமரின் இந்த பயணம் தொடர் போராட்டங்கள் நிறைந்த அத்தியாயம் என்று குறிப்பிட்ட நிதின் நபின், 'ஜவாஹர்லால் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தியை போல் அல்லாமல், தேர்தலுக்கு முன்பே பிரதமர் வேட்பாளராக வெளிப்படையாக அறிவிக்கப்பட்டு, மக்களால் நேரடியாக தேர்வு செய்யப்பட்ட முதல் பிரதமர்; அரசியல் குடும்ப பின்னணி இல்லாமல் உயர் பதவிக்கு வந்தவர்' என்று புகழாரம் சூட்டினார்.

மத்திய பாஜக அரசின் பல்வேறு சாதனைகளையும் அவர் பட்டியலிட்டார்.

'வெங்காயம் விலை மேலும் குறையும்'

புது தில்லி, அக். 7: காரிஃப் பயிர்கள் வரத்து தொடங்கியுள்ளதால் வெங்காய விலை மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய அரசு புதன்கிழமை தெரிவித்தது.

நாட்டில் வெங்காய இருப்பு மற்றும் சில்லறை விலை நிலவரத்தை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய உணவுத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'கர்நாடகம், ஆந்திரம், ராஜஸ்தான் உள்ளிட்ட முக்கிய உற்பத்தி மாநிலங்களிலிருந்து காரிஃப் (மழைக்காலம்) பருவ வெங்காயம் வரத்து தொடங்கியுள்ளது.

மற்றொருபுறம், சந்தை தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கையிருப்பில் இருந்து வெங்காயம் விடுவிக்கப்பட்டு வருகிறது. சாமானிய மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், மத்திய அரசு தனது கையிருப்புகளில் இருந்து வெங்காயத்தை மானிய விலையில் விற்பனை செய்து வருகிறது.

பண்டிகை காலத்துக்கு முன்பாக வெங்காய வரத்து மேலும் வேகமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், அரசின் விநியோக முயற்சிகள் வலுப்படுத்தப்படுவதால், வெங்காயம் விலை மேலும் குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025–26 ஆம் ஆண்டில் வெங்காய உற்பத்தி 307.37 லட்சம் டன்கள் கணக்கிடப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டின் உற்பத்திக்கு (307.67 லட்சம் டன்) ஏறக்குறைய சமமாகும்.

ரயில் என்ஜின் பற்றாக்குறை: பயணிகள் ரயில்களில் சரக்கு என்ஜின்கள்

புது தில்லி, அக். 7: பயணிகள் ரயில்களுக்கான என்ஜின்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், குறைந்த வேகத்தில் இயங்கும் சரக்கு ரயில் என்ஜின்கள் இணைக்கப்பட்டு பயணிகள் ரயில்கள் பல மணி நேரம் தாமதமாக இயக்கப்படுவதாக ரயில்வே ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

நாடு முழுவதும் உள்ள பல்வேறு ரயில்வே மண்டலங்களில் இதுபோன்ற 80 முதல் 100 சம்பவங்கள் மாதந்தோறும் பதிவாகி வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், 'என்ஜின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. 2026–27–ஆம் ஆண்டில் 492 பயணிகள் ரயில் என்ஜின்கள், 2027–28–ஆம் ஆண்டில் 187 என்ஜின்கள் என மொத்தம் 679 என்ஜின்கள் உற்பத்தி செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2026–27–ஆம் ஆண்டுக்கான உற்பத்தித் திட்டத்தில் 326 டபிள்யூஏபி–7 என்ஜின்களும், 166 டபிள்யூஏபி–7 என்ஜின்களும் இடம்பெற்றுள்ளன.

இதனுடன், நவீன ரயில் தொகுப்புகள் விரைவாகப் பயன்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே உள்ள தொகுப்புகளை பயன்படுத்தும் வகையில் திறன் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளில் ரயில் சேவைகளின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது.

அனைத்து தரப்பு பயணிகளுக்கும் வசதியான மற்றும் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்ய அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது' என ரயில்வே அமைச்சகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

2026 செப்டம்பர் நிலவரப்படி, இந்திய ரயில்வே துறையிடம் சுமார் 17,900 என்ஜின்கள் பயன்பாட்டில் உள்ளன. இதில் சுமார் 13,700 மின்சார என்ஜின்களும், சுமார் 4,200 டீசல் என்ஜின்களும் உள்ளன. 13,700 மின்சார என்ஜின்களில் சுமார் 3,400 பயணிகள் ரயில் என்ஜின்களாகும்.

4,200 டீசல் என்ஜின்களில் 284 என்ஜின்கள் பயணிகள் ரயில் சேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான டீசல் என்ஜின்கள் சரக்கு ரயில் இயக்கம், ரயில் பெட்டிகளை இழுத்துச் செல்லும் பணி, துறைசார் பணிகள் உள்ளிட்டவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

2014–ஆம் ஆண்டுக்குப் பிறகு ரயில்வே மின்மயமாக்கல் வேகம் அதிகரித்ததால், டீசல் என்ஜின்களின் உற்பத்தி படிப்படியாகக் குறைக்கப்பட்டு, மின்சார என்ஜின்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டது.

2013–14–ஆம் ஆண்டில் 5,633 டீசல் என்ஜின்கள் மற்றும் 4,823 மின்சார என்ஜின்கள் என மொத்தம் 10,456 என்ஜின்கள் இருந்தன.

அப்போது இருந்த 4,823 மின்சார என்ஜின்களில் 1,371 பயணிகள் ரயில் என்ஜின்களாக இருந்தன.

எனினும், மொத்த டீசல் பயணிகள் ரயில் என்ஜின்களின் எண்ணிக்கை அந்த ஆண்டுக்கான தரவுகளில் குறிப்பிடப்படவில்லை.

Tamil Nadu Power Distribution Corporation Ltd.
Notice Inviting Tenders (E-Tendering Process)
TNPDCL /SHORT/ PP-46/2026-2027

TNPDCL invites E-Tender for procurement of RTC and peak hours (18:00 to 24:00 hrs) power from 01.02.2027 to 31.07.2027 from both Interstate and Intrastate generators on firm basis from CERC/TNERC approved Traders/ Generators. Bidding will be done as per the revised guidelines for short term procurement of power notified by the Ministry of Power vide resolution dated 30.03.2016 and as per amendments dated:21.02.2022 through e-Bidding portal (DEEP) only and subsequent amendments thereof are applicable to this tender specification. The link for the e-Bidding portal is **www.mstcecommerce.com** and is also available on the website of Ministry of Power (**www.powermin.nic.in**) and PFC Consulting Ltd (**www.pfcclindia.com**). Specification is available in TNPDCL website and MSTC DEEP E-Bidding portal.

Chief Engineer / PPP
TNPDCL

DIPR/3061/Tender/2026

GREATER CHENNAI CORPORATION
SPECIAL PROJECTS DEPARTMENT
S.P.D.C.No. B1/1712/2026 **e-TENDER NOTICE**

e-Tender is invited for the following work in Two Cover System as per details furnished below :

S.P.D.C.No.B1/1712/2026
Construction of an Access Pathway for Differently abled Person at Marina beach
Work Value : Rs.2,17,91,297/- (Inclusive of GST)
EMD : 1% of Work Value
Tender document will be available in website : https://tntenders.gov.in
EMD Amount through e-BG / online net banking transaction on e-tender portal only.
Tender last date and time of submission : 22.10.2026 upto 3.00 p.m.
Tender opening date and time : 23.10.2026 at 3.00 p.m.

DIPR/ 3055 /TENDER/2026 Superintending Engineer, (Special Projects)

மானாமதுரை நகராட்சி
இணையவழி மறு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
தூய்மை இந்தியா திட்டம் 2025–26
(ந.க.எண்.271/2026/இ1 நாள்.06.10.2026)

1. தூய்மை இந்தியா திட்டம் 2025–26ன்கீழ் பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.
2. பணியின் மதிப்பு ரூ.175.00/– இலட்சம் ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை **www.tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை **www.tntenders.gov.in** என்ற இணையதள முகவரியில் **08.10.2026** முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் **28.10.2026** அன்று மாலை **3.00** மணிவரையில்.
6. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **28.10.2026** அன்று மாலை **3.30** மணி மானாமதுரை நகராட்சி அலுவலகத்தில் திறக்கப்படும்.
7. பணியின் மதிப்பீட்டு தொகை மற்றும் டேவணித் தொகை ஒப்பந்ததாருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியவும்.

ஆணையாளர்,
மானாமதுரை நகராட்சி.

செ.ம.தொ.இ/ 3050 /ஒப்பந்தப்புள்ளி/2026

பாங்க் ஆஃப் பரோடா
बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda
India's International Bank
119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா
கிளை : ROSARB (பிராந்திய ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் வசூல் கிளை)
2வது தளம், எண்.82, பேங்க் ரோடு, கோயம்புத்தூர் – 641 018
போன் : 0422 2302423, 2302324. மின்னஞ்சல் : sarcoi@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமின்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ. எண்.	கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் சுருக்க விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன்	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1.	**M/s. அவதார் இண்டஸ்ட்ரீஸ் (கடன்தாரர்),** பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள், K.K.KACHARES, V.K.பாளையம், காடிவாவி (வழி), புளியம்பட்டி கிராமம், பல்லடம் தாலுகா திருப்பூர் மாவட்டம் – 641 658. **திருமதி. P. காயத்திரி (M/s. அவதார் இண்டஸ்ட்ரீஸின் பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** க/பெ இளங்கோவன், கதவு எண்.5/129, கணேஷ் கார்டன், காடம்பாடி, சூலூர், கோயம்புத்தூர் – 641 401. **திரு. M. ஜெகதீசன் (M/s. அவதார் இண்டஸ்ட்ரீஸின் பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர்),** த/பெ மருதாசல மூர்த்தி, எண்.7/42–30, குமரன் நகர் பேஸ்–2 கிரணத்தம், சரவணம்பட்டி அஞ்சல், கோயம்புத்தூர் – 641 035. **திருமதி. K. பத்மாவதி (M/s. அவதார் இண்டஸ்ட்ரீஸின் பங்குதாரர், உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்),** க/பெ கந்தசாமி, கதவு எண்.82/4 (1B), சாமப்பா லேஅவுட் கெண்டையூர் கிராமம், மேட்டுப்பாளையம், மகாதேவபுரம், கோயம்புத்தூர் – 641 305.	**திருமதி. K.பத்மாவதியின் சொத்து.** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகா, சிக்கதாசம்பாளையம் கிராமம், மேட்டுப்பாளையம் டவுன், கெண்டையூர் பட்டா எண்.531, சர்வே எண்.272/1ல் உள்ள 2.82 ஏக்கர், இதிலடங்கிய வடபுறப் பகுதியிலுள்ள 1.79 ஏக்கர் நிலம் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு, C எண்.2516/81 CNR 5L P/R (CN) 137/81 ல் லேஅவுட் அங்கீகாரம் பெற்றதில், அதிலுள்ள மனை எண்.11 ன் தென்புறப் பாதி பங்கு 1237 ½ சதுரடிக்கு எல்லைகள் விபரம் : மனை எண்.12 க்கு வடக்கு, A பிரேமினாவுக்குச் சொந்தமான மனை எண்.11 ன் வடபுற பாதி பங்கிற்குத் தெற்கு, லேஅவுட் பிளானின்படியான 30 அடி தென்வடல் ரோடுக்குக் கிழக்கு, மனை எண்.10 ல் உள்ள மாகாளியப்பனுக்குச் சொந்தமான வீட்டுக்கு மேற்கு. அளவுகள் : கிழமேல் வடபுறம் – 41 ½ அடி, கிழமேல் தென்புறம் – 41 அடி, தென்வடல் மேற்புறம் – 30 அடி, தென்வடல் கிழபுறம் – 30 அடி. இந்த அளவுகளுள்ள மொத்தம் 1237 ½ சதுரடி நிலம், காலி நிலம் மற்றும் லேஅவுட்டின் ரோடுகளின் வழியே சொத்திற்குச் சென்றுவரும் வழித்தட உரிமைகளுடன் மற்றும் அங்குள்ள அனைத்துப் பிற பாத்தியதைகளுடன். அதில் கட்டப்பட்ட கதவு எண்.82/4 (1B), கதவுகள், சன்னல்கள், நிலவுகள், மின்சார சர்வீஸ் இணைப்பு, குடிநீர் இணைப்பு முதலியன. கதவு எண்.82/4 (1B), சொத்து வரி விதிப்பு எண்.14515, குடிநீர் இணைப்பு எண்.6799, மின்சார சர்வீஸ் இணைப்பு எண்.153–008–445. இச்சொத்து மேட்டுப்பாளையம் டவுன் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டு, மேட்டுப்பாளையம் டவுன், பழைய வார்டு எண்.13, புதிய வார்டு எண்.24, டவுன் சர்வே எண்.26, பிளாக் எண்.46 ல் அமைந்துள்ளது. சொத்தானது கந்தசாமி மனைவி திருமதி. K.பத்மாவதிக்குச் சொந்தமானது. **அட்சரேகை : 11.297842 தீர்க்கரேகை : 76.928369**	அனைத்து கடன் வசதிகளுக்குமான நிலுவைத் தொகை : 04.10.2026 தேதியன்று, ரூ.1,03,23,114/– (ரூபாய் ஒரு கோடியே மூன்று லட்சத்து இருபத்து மூன்றாயிரத்து நூற்றுப் பதினான்கு மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	30.10.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.30,00,000/– 2. ரூ.3,00,000/– 3. ரூ.50,000/–	கொள்நிலை (Physical) சுவாதீனம்	29.10.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
2.	**திரு.S.அருண்குமார்,** த/பெ. S.P. சுகுமார், பார்சன் செஷ் நெஸ்லே, ஹால்மார்க் அபார்ட்மெண்ட்ஸ், பிளாக் எண்.3, ஃப்ளாட் எண்.5, நஞ்சுண்டாபுரம் ரோடு, கோயம்புத்தூர் – 641 036. **திரு. S.P. சுகுமார்,** பார்சன் செஷ் நெஸ்லே, ஹால்மார்க் அபார்ட்மெண்ட்ஸ், பிளாக் எண்.3, ஃப்ளாட் எண்.5, நஞ்சுண்டாபுரம் ரோடு, கோயம்புத்தூர் – 641 036.	**திரு.S.அருண்குமாரின் சொத்து. அட்டவணை A :** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மதுக்கரை சார் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு தாலுகா, மதுக்கரை கிராமம், பட்டா எண்.422, சர்வேக் கள எண்.1004/25, இதில் மொத்தமுள்ள 2.79 ஏக்கரில், வடகிழக்குப் பகுதி 0.96 ¼ ஏக்கர் அமைந்த எல்லைகள் விபரம்: தனபால் மற்றும் பிறருக்குச் சொந்தமான சர்வே எண்.1004/2 ல் உள்ள 0.80 ¾ ஏக்கர் நிலச் சொத்துக்கு வடக்கு, சர்வே எண்.997 ல் உள்ள நிலங்களுக்குத் தெற்கு, சர்வே எண்.1004/3 A ல் அமைந்த நிலச் சொத்துக்கு மேற்கு, சர்வே எண்.1004/2 ல் உள்ள தனபாலிற்குச் சொந்தமான நிலத்துக்கு மற்றும் தனபாலால் விடப்பட்ட 30 அடி அகல வண்டித் தடத்துக்குக் கிழக்கு. அதனோடான வழக்கமான வழித்தட உரிமைகளுடன் மற்றும் மேற்சொன்ன சர்வேக் களத்தில் மேற்புற பகுதியிலுள்ள, தனபால் மற்றும் பிறருக்குச் சொந்தமான சொத்துப் பகுதியின் வழியே செல்லும் 30 அடி அகல வண்டித் தடத்தில் உரிமை மற்றும் அங்குள்ள பிற பாத்தியதைகளுடன். இச்சொத்து சர்வே எண்.1004/2 B ல் மதுக்கரை பஞ்சாயத்து எல்லைக்குள் உள்ளது. **அட்டவணை B :** மொத்தமுள்ள அட்டவணை A சொத்தில் 291.05 சதுரடி பிரிபடாத பங்கு நிலம். **அட்டவணை C :** "சாய்தான் என்கிளேவ்" என்றழைக்கப்படுகிற கட்டிடத்தின், B பிளாக்கில், அபார்ட்மெண்டின் முதல் தளத்திலுள்ள மொத்தம் 658.79 சதுரடி சிறப்புக் கட்டுமானப் பரப்பு கொண்ட, ஃப்ளாட் எண். B1–1, பொதுப் பகுதிகளில் உரிமை மற்றும் ஒரு வாகன நிறுத்துமிடத்துடன். **அட்சரேகை : 10.930538 தீர்க்கரேகை : 76.928076**	நிலுவைத் தொகை : 04.10.2026 தேதியன்று, ரூ.40,66,356/– (ரூபாய் நாற்பது லட்சத்து அறுபத்து ஆறாயிரத்து முன்னூற்று ஐம்பத்து ஆறு மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	30.10.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.23,00,000/– 2. ரூ.2,30,000/– 3. ரூ.50,000/–	கொள்நிலை (Physical) சுவாதீனம்	29.10.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
3.	**M/s. இன்னோவ் இம்பெக்ஸ் (கடன்தாரர்),** பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் திரு. P. பிரபு மற்றும் திரு. கார்த்திக், எண்.7/1, புத்தூரான் தோட்டம், சாமுண்டிபுரம், திருப்பூர் – 641 603. **திரு. P. பிரபு (பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்)** த/பெ. திரு. பழனிசாமி, எண்.24/85, அப்பாச்சி நகர் மெயின் ரோடு, திருப்பூர் – 641 607. **திரு. P. கார்த்திக் (பங்குதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்)** த/பெ. திரு. பழனிசாமி, எண்.24/85, அப்பாச்சி நகர் மெயின் ரோடு, திருப்பூர் – 641 607. **திரு. P. பழனிசாமி (உத்தரவாதமளித்தவர் மற்றும் அடமானதாரர்) (காலஞ்சென்றவர்)** **திருமதி. பூங்கொடி,** க/பெ. **திரு. பழனிசாமி, திரு. பழனிசாமியின் சட்டபூர்வ வாரிசுதாரர்,** **திரு. கார்த்திக்,** த/பெ. **திரு. பழனிசாமி, திரு. பழனிசாமியின் சட்டபூர்வ வாரிசுதாரர்,** **திரு. பிரபு,** த/பெ. **திரு. பழனிசாமி, திரு. பழனிசாமியின் சட்டபூர்வ வாரிசுதாரர்,** எண்.24/85, அப்பாச்சி நகர் மெயின் ரோடு, திருப்பூர் – 641 607.	**திரு. P. பிரபு மற்றும் திரு. P. கார்த்திக் (பங்குதாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள்) ஆகியோரின் சொத்து. ஆவண எண்.1450/2004 ன்படி.** திருப்பூர் பதிவு மாவட்டம், தொட்டிபாளையம் சார் பதிவு மாவட்டம், திருப்பூர் தாலுகா, தற்போது திருப்பூர் வடக்கு தாலுகா, தொட்டிபாளையம் கிராமம், பொது சர்வே எண்.203/2 ல் உள்ள 1.13 ஏக்கர் தீர்வை ரூ.1.55, இதில் விற்பனையாளர்கள் குமாரசாமி மற்றும் அய்யாசாமி ஆகியோரால் தடத்திற்கென்று நிலங்கள் விடப்பட்டது கழிபட்டதில், மீதமுள்ள 0.93 ஏக்கர் நிலத்தின் எல்லைகள் விபரம் : 37 லிங்குகள் கிழமேல் தடத்துக்குத் தெற்கு, நல்லாறு புறம்போக்கிற்கு வடக்கு, 37 லிங்குகள் தென்வடல் தடத்துக்குக் கிழக்கு, பொது சர்வே எண்.203/3 ல் உள்ள நிலங்களுக்கு மேற்கு. இவ்வெல்லைகளுக்கிடையிலுள்ள மேற்குறிப்பிட்ட நிலம் 0.93 ஏக்கர் முழுமையும், 37 லிங்குகள் கிழமேல் மற்றும் தென்வடல் தடத்தில் வழக்கமான வழித்தட உரிமைகளுடன் மற்றும் மேற்குறிப்பிட்ட நிலங்களுக்குண்டான வழக்கமான வழித்தடத்தில் மற்றும் வண்டித்தடத்தில் உபயோக உரிமைகளுடன் மற்றும் அனைத்து வசதிகளில் உரிமைகளுடன். **அட்சரேகை : 11.140316 தீர்க்கரேகை : 77.363263**	நிலுவைத் தொகை : 30.09.2026 தேதியன்று, ரூ.1,32,21,913/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து இரண்டு லட்சத்து இருபத்து ஓராயிரத்து தொள்ளாயிரத்துப் பதின்மூன்று மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	30.10.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.2,51,10,000/– 2. ரூ.25,11,000/– 3. ரூ.1,00,000/–	கொள்நிலை (Physical) சுவாதீனம்	29.10.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
4.	**M/s. RR ஏஜென்சீஸ் (கடன்தாரர்),** பிரதிநிதியாக அதன் உரிமையாளர், திரு. S.ரகுராமன், கதவு எண்.401, பிரிஜோ அபார்ட்மெண்ட்ஸ், முருகன் நகர், விளாங்குறிச்சி, கோயம்புத்தூர் – 641 033. **திரு. S. ரகுராமன் (உரிமையாளர் மற்றும் அடமானதாரர்),** த/பெ. திரு. ஸ்டாலின் TM, X4, IUDP காலனி, செல்வபுரம், கோயம்புத்தூர் – 641 026.	**திரு. S.ரகுராமன் பெயரில் உள்ள சொத்து.** கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் சார் பதிவு மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுகா, சிறுமுகை கிராமம், ஜீவா நகர், சர்வே எண்.51 ல் உள்ள 3.20 ஏக்கர் நிலம். இதிலுள்ள வீட்டுச் சொத்தின் எல்லைகள் மற்றும் அளவுகளின் விபரம்: சுப்பம்மாளுக்குச் சொந்தமான மீதமுள்ள சொத்துக்கு வடக்கு, கிழமேல் 8அடி அகல பொது ரோடுக்குத் தெற்கு, கோவிந்தராஜுக்குச் சொந்தமான சொத்துக்குக் கிழக்கு, அங்கமுத்து சுப்ரமணியத்துக்குச் சொந்தமான சொத்துக்கு மேற்கு. இவ்வெல்லைகளுக்கிடையில், கிழமேல் வடபுறம் – 33 அடி, கிழமேல் தென்புறம் – 36 அடி, தென்வடல் இருபுறமும் – 70 அடி, எனச் சேர்ந்த மொத்தம் 2415 சதுரடி மற்றும் 235 சதுரடி அல்லது 224.36 சதுர மீட்டர் மனையிடம் அங்குள்ள கட்டிடத்துடன், அதனோடான அனைத்துப் பிற பாத்தியதைகளுடன், சொத்து வரி விதிப்பு மின்சார சர்வீஸ் இணைப்பு மற்றும் அதன் காப்புத் தொகை மற்றும் வழித்தட உரிமைகளுடன், கட்டிடக் கதவு எண்.23D, சொத்து வரி விதிப்பு எண்.2813. சொத்தானது உட்பிரிவு சர்வே எண்.51/2 ல், சிறுமுக டவுன் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்டு அமைந்துள்ளது. இச்சொத்து திரு. ஸ்டாலின் மகன் திரு. S.ரகுராமனுக்குச் சொந்தமானதாகும். **அட்சரேகை : 11.321580 தீர்க்கரேகை : 77.011231**	நிலுவைத் தொகை : 04.10.2026 தேதியன்று, ரூ.75,15,850.26 (ரூபாய் எழுபத்து ஐந்து லட்சத்து பதினைந்தாயிரத்து எண்ணூற்று ஐம்பது மற்றும் பைசா இருபத்து ஆறு மட்டும்) மற்றும் பின்வட்டி, செலவுகள், பிற கட்டணங்களுடன்.	30.10.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.47,00,000/– 2. ரூ.4,70,000/– 3. ரூ.50,000/–	கொள்நிலை (Physical) சுவாதீனம்	29.10.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு **https://bankofbaroda.bank.in/e-auction** இணையதளம் 'லிங்க்'கில் மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் **https://baanknet.com** –ல் பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை **போன் : 9538993885** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 06.10.2026
இடம் : கோயம்புத்தூர்

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
பேங்க் ஆஃப் பரோடா